
உ

சிவமயம்.

தில்லைக்கூத்தர் கும்பாபிஷேக

வெளியீடு

தில்லை நவமணிமாலை



ஆக்கியோன்:

இசைத்தமிழ் வீ. பரமசிவம்பிள்ளை

சிதம்பரம்.

7—5—1955

[அணா 0-1-0

உ

சிவமயம்.

கலி 5056 மன்மத ஆண்டு ஆனித்திங்கள்
23-ம் நாள் (7—7—1955) தில்லைக்கூத்தர்
திருக்கோயில்

கும்பாபிஷேக விழா வெளியீடு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்
தமிழ் விரிவுரையாளராகவிருந்து ஒய்வுபெற்றுள்ள
திருவாளர்

R. P. அமிர்தலிங்கம்பிள்ளையவர்கள்

அளித்த

சாற்றுக்கவி.

வெண்பா.

நல்லார் வாழ்தில்லை நவமணி மாலைநூல்
எல்லாரும் போற்ற வினிதளித்தான் — வல்லநடம்
ஆடும் பெருமா னடியிணையே யென்ஞான்றும்
பாடும் பரம சிவன்.

உ

தில்லை நவமணி மாலை.

காப்பு.

வஞ்சித்துறை.

முதல்வன் பொன்மன்றோன்
பதநா வாலேத்த
மதநீள் கைம்மாதாள்
இதயத் துள்வைப்பாம்.

நூல்.

கட்டளைக் கலித்துறை.

1 நாடும் பலகலை ஞானமும் பத்தியு நல்வினைப்
பாடும் பணியெனக் கீந்துன தன்பர் பசிப்பிணி தான்
ஓடும் படியமு தென்று மளித்திட வோங்குநிதி
கூடும் படியருள் பொன்னம் பலவா குவலயத்தே

2 குவலய முய்ந்திடத் தில்லையு ளாடுங் கூத்தனே யான்
சவலையார் பிள்ளைபோ லெய்த்திடா தென்னுளஞ் சார்ந்திருந்தே
கவலையை நீக்கிநீ நற்றுணை யாயெனைக் காத்தருளித்
திவலைநே ரத்தினுந் தாண்மற வாத்தமிழ்ச் சேருளே.

3 சீரோங்கு மந்தண ரேத்திடுந் தில்லைச்
சிவக்கொழுந்தே
பாரோங்கு சான்ருேர் பணிபுலி போற்றப்
பதமருள்செய்
தாரோங்கு சென்னியு ணன்மதி தாங்கிய
தாண்டவனே
நேரோங்க வென்றனக் கீந்தரு ளின்னிசை
நீணிதியே

4 நீள்சடை தன்னு ளறுகுடன் கங்கை கிறைமலராய்
தாள்குறித் தாடுஞ் செயலா லருளுந்
தனித்தலைவா
வேள்படத் திக்கண் விழித்தருள் தில்லை
விளங்கரசே
கோள்களின் றீதுரு தென்றனக் கின்பங்
கொடுத்தருளே

5 அருளே விளங்க வொருசிற் சபைவா
ழணிநடத்தாய்
தெருளே னுனதின் னடிதான் புகழத்
திரமருள்வாய்
மருளே மிகுமென் மனந்தான் குவிய மகிதலத்தே
இருளே யடையா தடியே னறிவு ளிசைந்தருளே

6 இசைசால் திருச்சிற் சபையு ணடஞ்செ யெழிலரசே
தசைசா லுடலஞ் சுமந்து தினமயான் றரணிதனில்
வசைசால் கயவர் குழுவு ளிணையா வகையருளி
இசைசால் தமிழுந் திருவும் பெருக விரங்குகவே

7 இரங்கு முளத்தா லிறைவா வுனையா
ளிமைப்பொழுதும்
திரங்குவி லின்றி யினிய வருளித் திருக்கனக
அரங்கு தனிநிச்சீர் நடஞ்செ யமுதே யடியனேற்கு
வரங்குறி கையா லறங்கூர் திருநீ வளர்த்தருளே

8 வளர்வெண் மதியும் பணியுஞ் சடையுள்
வளர்த்தவனே
ஒளர்மூ விலைவேல் கரத்தாய் வரைமா
இழித்தவனே
களர்மண்ணி னெக்கும் தமியேற் கிரங்கி
கனகமன்றேய்
தளர்வே யுருவெதன் வினைவெங் கனலைத்
தணித்தருளே

9 தணிகைப் பதிவாழ் குகனை யளித்தோய்
தனஞ்செயனும்
வணிகற் றெங்கி யுருக்காட்டி யாண்ட
வளரொளியே
துணிநீண் மதியாய் கனக சபைவாழ்
துடிநடத்தாய்
மணிநெல் செறிந்து நிதிசா லறங்கள் மலிகநாடே.

வாழ்த்து.

நாடுங் கலைகள் பலவும் வளர்க நயந்துதில்லைப்
பாடும் பரம சிவன்சீர்க் கருளக பயில்நடத்தாய்
கூடும் நிதிசா லறங்கள்பொலிக குறைமிறைஞ்சி
வாடும் வறிஞர் வறுமை களைந்தென்றும் வாழ்க
நாடே.

கும்பாபிஷேகப் பாடல்.

கொச்சகம்.

பகர்கலியை யாயிரத்தைம் பத்தாறின் மன்மதச்சீர்
திகழிருபான் மூன்றுனித் திருக்குடநீ ராட்டுவிழா
அகமகிழக் கொண்டருள் பொன் னம்பலவா
தில்லையினுட்
சகமுழுதுங் கண்டுய்யத் தளிர்த்திடுமுன்
னடம்போற்றி.

கீர்த்தனை

தேவகாந்தாரி] பல்லவி. [ஆதிதாளம்

ஆடியபாதா பொன் னம்பல நாதா
பாடி யடியேனுன்றுள் பரவிட வேயருள்வாய் (ஆடிய)

அநுபல்லவி

நாடியே தும்புருவும் நாரத ரும்யாழுடன்
பாடியே நிசைமிகவே பற்றிய வுடுக்கையுடனே
(ஆடிய)

சரணம்

பாதத்தால் முயலகனைப் பதைத்திடவே மிதித்துப்
பாதக வனலேந்திப் பாம்புமநன் மதியறுகும்
வேதனுங் காணுத வியன்முடி மேலணிந்தோய்!
ஏதமினறி யினபுடன் என்றுமெனை யாள்வாயே

கார்நிற மிடற்றெந்தாய் காலனைக் காய்ந்தவனே
பார்முழு துமுய்யவே பாம்பும் புலியுங்காணத்
தார்குழ லுமையுடனே தாண்டவஞ் செய்தருளும்
சேர்மிகுந் தில்லைததலம் திகழும் நடராஜனே (ஆடிய)

[டி கீர்த்தனை, இசைத்தமிழ் வி. பரமசிவம்பிள்ளை பாடியது]

தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை
மூர்த்தியை முதலாய வொருவனை
பார்த்தனுக் கருள்செய்த சிற்றம்பலக்
கூத்தனைக் கொடியேன் மறந்துய்வனோ
(திருநாவுக்கரசர்)

நூற்பயன்.

★★

தில்லைக்கூத்தன் திருவருளால் தூண்டப் பெற்றுப் பாடிய இந்நூலை நாளும் வழுவா தோதும் அன்பர்கள் யாவரும் "வேண்டுவார் வேண்டியதே யீவான் கண்டாய்" என்று நாவுக்கரசர் கூறியவண்ணம் இந்நூற்பாக்களி லுள்ள எல்லா நலன்களையும் பெற்றின்புறுவ துடன் சிற்றம்பலவன் திருவருட்பேற்றினால் என்றும் இனிது வாழ்வார்கள்,

—:—

தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே
(குமரகுருபரர்)

தம்பி அச்சகம், சிதம்பரம்.